பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
18 11 2024 7 15
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரேசிலில் நடைபெறும் ஜி-20 உச்சிமாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று பங்கேற்கிறார்.

2. மணிப்பூரில் வன்முறையில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

3. மகாராஷ்டிரா மற்றும் ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

4. தில்லியில் காற்று மாசு மோசமடைந்துள்ளதால் பள்ளி வகுப்புகள் ஆன்லைன் மூலம் நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

5. பஹ்ரைன் சர்வதேச பேட்மிட்டன் போட்டியில் இந்தியாவின் **Prakriti Barat** பட்டம் வென்றார்.

<<<<>>>>

நைஜீரியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்திய வம்சாவளியினர் குறிப்பிடத்தக்க அளவில் பங்காற்றியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

அபுஜாவில் நேற்று இந்தியா வம்சாவளியினரிடையே உரையாற்றிய அவர், இந்திய நிறுவனங்கள் அந்நாட்டு பொருளாதார வளர்ச்சிக்கு வலுசேர்த்து வருவதாக கூறினார்.

நைஜீரியாவில் உள்ள வெளிநாடு வாழ் இந்தியர்கள் யோகக் கலை மற்றும் ஹிந்தி மொழியை பிரபலப்படுத்தி வருவதற்கு பிரதமர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

நைஜீரிய நாட்டின் உயரிய விருது தமக்கு வழங்கப்பட்டதற்கு நன்றி தெரிவித்துக்கொண்ட அவர், இந்த விருதை இந்திய மக்களுக்கு அர்ப்பணிப்பதாக கூறினார்.

இந்தியாவின் பாதுகாப்பு தளவாட ஏற்றுமதி 30 மடங்கு அதிகரித்துள்ளதாகத் தெரிவித்த பிரதமர், நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பாதுகாப்பு சாதனங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாக கூறினார்.

முன்னதாக அந்நாட்டு அதிபர் **Bola Ahmed Tinubu**-ஐ சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்தினார்.

இதனையடுத்து இருநாட்டு தலைவர்கள் முன்னிலையில் 3 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

தமது நைஜீரிய பயணத்தை முடித்துக்கொண்ட பிரதமர், ஜி-20 உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக பிரேசில் சென்றடைந்தார்.

அங்கு அவருக்கு வேத மந்திரங்கள் முழங்க சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதில் ஆச்சார்யா விஷ்வநாத் தலைமையிலான நூற்றுக்கும் மேற்பட்டோர் வேதமந்திரங்களைப் பாடியது இரு நாடுகளுக்கும் இடையேயான கலாச்சார தொடர்புகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இந்த உச்சிமாநாட்டில் பல்வேறு சர்வதேச விவகாரங்களில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து பிரதமர் விரிவாக எடுத்துரைக்கிறார்.

இதனிடையே பல்வேறு நாட்டுத் தலைவர்களையும் அவர் சந்தித்துப் பேச்சு நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தமது பயணத்தின் இறுதிக்கட்டமாக கயானா செல்லும் பிரதமர், இம்மாதம் 21ஆம் தேதி தாயகம் திரும்புகிறார்.

<<<<>>>>

மணிப்பூரில் நிலவும் சூழல் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா புதுதில்லியில் நேற்று ஆய்வு செய்தார்.

இக்கூட்டத்தில் அம்மாநில விவகாரம் குறித்து சம்பந்தப்பட்ட துறைகளைச் சேர்ந்த உயரதிகாரிகளுடன் விரிவான ஆலோசனை நடத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே மணிப்பூரில் சட்டம் ஒழுங்கு மற்றும் அமைதியை நிலைநிறுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு பாதுகாப்புப் படையினருக்கு உள்துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வன்முறையில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வதந்திகளை நம்பாமல் பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே அம்மாநில முதலமைச்சர் திரு. பைரன்சிங் தலைமையிலான அரசுக்கு அளித்து வரும் ஆதரவை விலக்கிக்கொள்வதாக தேசிய மக்கள் கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சித் தலைவர் திரு. கர்னாட் கே. சங்மா பிஜேபி தலைவர் திரு. நட்டாவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் அம்மாநிலத்தில் நிலவும் சட்டம்-ஒழுங்கு சூழல் கவலையளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<>>>

வறுமைக்கு எதிரான நடவடிக்கைகள் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்று ஜி-20 அமைப்பின் இந்திய பிரதிநிதிகள் குழுத் தலைவர் திரு. அமிதாப் காந்த் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக ஆகாஷ்வாணி வானொலி நிலையத்திற்கு பேட்டியளித்த அவர், கடந்த ஆண்டு இந்தியா தலைமையில் நடைபெற்ற ஜி-20 மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையிலான செயல்பாடுகள் குறித்து பிரேசிலில் நடைபெற்று வரும் ஜி20 அமைப்பின் ஆலோசனைக் கூட்டங்களில் விவாதிக்கப்பட்டு வருவதாகக் கூறினார்.

மாறிவரும் புவிசார் அரசியல் சூழலின் தாக்கம் குறித்தும் இதில் விரிவாக விவாதிக்கப்பட்டு வருவதாக திரு. அமிதாப் காந்த் கூறினார்.

<<<>>>

மகாராஷ்டிரா மற்றும் ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

மகாராஷ்டிராவில் ஒரேகட்டமாக நாளை மறுநாள் நடைபெற உள்ள வாக்குப்பதிவுக்குத் தேவையான அனைத்து முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அம்மாநிலத்தில் மொத்தமுள்ள 288 தொகுதிகளுக்கு நடைபெறும் தேர்தலில் நான்காயிரத்து 136 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இதில், 3 ஆயிரத்து 771 ஆண் வேட்பாளர்களும், 363 பெண் வேட்பாளர்களும் போட்டியிடுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஜார்கண்ட் மாநிலத்தில் இரண்டாவது கட்டமாக 38 தொகுதிகளுக்கு நடைபெறும் சட்டப்பேரவைத் தேர்தலுக்குத் தேவையான அனைத்து முன்னேற்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வாக்குப்பதிவை அமைதியாக நடத்துவதற்குத் தேவையான விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தில்லியில் காற்று மாசு மோசமடைந்துள்ளதால் பள்ளி வகுப்புகள் ஆன்லைன் மூலம் நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அம்மாநில அரசு வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்வுகள் தவிர பிற வகுப்புகளுக்கு ஆன்லைன் மூலம் வகுப்புகளை நடத்துமாறு அம்மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தில்லியில் காற்றின் தரக் குறியீடு 447 என்ற அளவில் பதிவாகி உள்ளதாக மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் கூறியுள்ளது.

இதனிடையே தில்லி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அடுத்த 2 நாட்களுக்கு கடும் பனிப்பொழிவு நிலவும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மூத்த இந்திய தகவல் சேவை அதிகாரியும், மறைந்த குடியரசுத்தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் முன்னாள் பத்திரிகை செயலாளருமான எஸ்.எம். கான் புதுதில்லியில் நேற்று காலமானார்.

1982ஆம் ஆண்டு இந்திய தகவல் சேவை அதிகாரியாக பொறுப்பேற்றுக்கொண்ட அவர், தூர்தர்ஷன் தொலைக்காட்சியின் செய்திப்பிரிவு தலைமை இயக்குநராகவும் பணியாற்றினார்.

பத்திரிகை தகவல் அலுவலகத்தில் நீண்டகாலம் பணிபுரிந்த அவர், தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் பல்வேறு பிரிவுகளிலும், மத்திய புலனாய்வுத் துறையிலும் திறம்பட பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

இலங்கையில் புதிய அமைச்சரவையின் பதவியேற்பு விழா அந்நாட்டு அதிபர் திரு. அநுர குமார திசநாயகே தலைமையில் இன்று நடைபெறுகிறது.

இந்த புதிய அமைச்சரவையில் 23 பேர் அமைச்சர்களாக நியமிக்கப்பட உள்ளதாக அங்கிருந்து வரும் ஊடகங்களின் செய்திகளை மேற்கோள்காட்டி தகவல்கள் தெரிவிக்கின்றன.

டாக்டர் ஹரினி அமரசூர்யா பிரதமராகவும், திருமதி விஜிதா ஹெரத் வெளியுறவுத்துறை அமைச்சராகவும் நியமிக்கப்பட உள்ளதாக அந்த தகவல்கள் மேலும் கூறுகின்றன.

இதனிடையே இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு 3 பில்லியன் அமெரிக்க டாலர்கள் அளவிற்கு நிதியுதவி வழங்குவது குறித்து ஆய்வு செய்வதற்கு சர்வதேச நிதியத்தின் பிரதிநிதிகள் குழு அந்நாட்டுக்கு சென்றுள்ளது.

<<<<>>>>

மக்களின் நலன் கருதி இந்தியா – பங்களாதேஷ் இடையேயான உறவுகள் தொடரும் என்று அந்நாட்டுக்கான இந்திய தூதர் திரு. பிரனே வர்மா கூறியுள்ளார்.

டாக்காவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், அமைதி, பாதுகாப்பு, வளர்ச்சி போன்ற நடவடிக்கைகளில் அந்நாட்டு அரசு கவனம் செலுத்தும் என்று தாம் நம்புவதாக கூறியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தகம், போக்குவரத்து, எரிசக்தி மற்றும் மக்கள் தொடர்பு போன்ற துறைகளில் உள்ள தற்போதைய நடைமுறைகள் தொடரும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிம்ஸ்டெக் அமைப்புக்கு வலுசேர்க்கும் வகையில் இந்தியா – பங்களாதேஷ் உடனான உறவுகள் உறுதியானதாக இருக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பஹ்ரைன் சர்வதேச பேட்மிட்டன் போட்டியில் இந்தியாவின் **Prakriti Barat** பட்டம் வென்றார்.

நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் அவர், 21-13, 21-17 என்ற செட் கணக்கில் இலங்கையின் ரணித்மா லியனகே-வை வென்றார்.

--------------

அமெரிக்காவில் நடைபெற்ற உலக கேரம் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த காசிமா 3 தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளார்.

மகளிர் ஒற்றையர், இரட்டையர் மற்றும் குழு போட்டி ஆகிய 3 பிரிவுகளில் அவர் இந்த தங்கப் பதக்கங்களை வென்றார்.

இப்போட்டியில் பதக்கம் வென்று சாதனை படைத்த அவருக்கு தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஆடவர் பிரிவில் இந்தியாவின் ஸ்ரீநிவாஸ் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

------------

உலக வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ஜோதி சுரேகா தங்கப்பதக்கம் வென்றார்.

லக்ஸம்பர்கில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் காம்பவுண்ட் பிரிவில் அவர், பெல்ஜியத்தின் **Passmeeri Marita**-வை வென்றார்.

--------------

ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் தெலுகு அணி – ஹரியானா அணியையும், பெங்களுரு அணி – மும்பை அணியையும் எதிர்கொள்கின்றன.

**<<<<The End>>>>**